DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC. No**. 03/2023

Deposition of LW2 examined as PW 2 Dt. 01.10.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருண்ராஜ் | Caste | : | |
| Father's/Husband's Name | : | செல்வம் | Calling | : | |
| Village | : | கொற்றவநல்லூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 43 /2024 |

(A1 to A3 Present. )

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தற்சமயம் நீடூர் பஞ்சாயத்து தலைவராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கொரோனா தடைக் காலத்தில் 2021ம் ஆண்டில் ஆஜர் எதிரிகள் சாராயம் எங்கள் ஊரில் விற்று வந்தனர். அப்போது ஊர் மக்களில் யாரோ மேற்படி எதிரிகள் ஊரில் சாராயம் விற்று வருகிறார்கள் என்ற தகவலை போலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதனால் போலிசார் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தனர். நான் தான் மேற்படி தகவலை போலிசாருக்கு தெரிவித்திருப்பேன் என தவறாக நினைத்துக்கொண்டு 11.06.2021ம் தேதி மாலை சுமார் 04.30 மணியிலிருந்து 05.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் மூவரும் குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்ற ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார். எங்களை அடிக்க வந்தனர். நாங்கள் அவர்களிடம் பிரச்சனை செய்யவில்லை. நான் எனது தம்பி அ.சா.1 னையும், எனது சித்தப்பா தியானேஸ்வரையும் காவல் நிலையம் நீங்கள் செல்லுங்கள் பின்னாடி நானும் வருகிறேன் என்று கூறினேன். அ.சா.1ம் தியானேஸ்வரனும் இருசக்கர வாகனத்தில் ஆனந்ததாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிரி சரண்ராஜ் என்பவர் அவர்களின் இருசக்கர வாகனத்தை மறைத்தனர். எதிரி சரண்ராஜ் கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1ன் தலையில் கொத்தினார். அதை தடுத்தபோது தியானேஸ்வரையும் தோள்பட்டையிலும் அருவால் கிழித்து விட்டது அவருக்கு இரத்தம் வந்தது. அவர்கள் இருவரும் ஒரு இருசக்கர வானத்திலும், நான் என்னுடைய இருசக்கர வாகனத்திலும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு அ.சா.1க்கும், தியானேஸ்வரனுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சையிலிருந்தபோது அ.சா.1ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் மருத்துவமனையிலேயே என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி கார்த்திகேயன் மைத்துனர் சரவணன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவருடைய நிலத்தை தற்போது சாகுபடி செய்துவருகிறீர்களா என்றால் இல்லை.இதற்கு முன்பு சாகுபடி செய்தீர்களா என்றால் ஒருவருடம் சாகுபடி செய்தேன். ஒரு வருடம் சாகுபடி செய்வதற்கு முன்பு யார் சாகுபடி செய்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இதற்கு முன்பு எதிரி கார்த்திகேயன் சாகுபடி செய்தார்

என்ற விபரம உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி கார்த்திகேயன் சாகுபடி செய்த நிலத்தை தான் சரவணனிடமிருந்து நீங்கள் வாங்கி சாகுபடி செய்தீர்கள என்றால் இல்லை அவர்களாகவே என்னிடம் சாகுபடி செய்ய ஒப்படைத்தார்கள் நான் அவர்களை கேட்கவில்லை. தற்போது அந்த நிலத்தை யார் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த நிலம் தற்போது சரவணன் வசம் இருந்து வருகிறது நீங்கள் சாகுபடி செய்யவில்லை என்றால் தரிசாகதான் கிடைக்க வேண்டுமென்று சொல்லியுள்ளீர்கள் என்றால் இல்லை. நீங்கள தான் எங்களை மீறி இந்த நிலத்தை யார் சாகுபடி செய்யப்போகிறார்கள் என்று எதிரிகளை காமகுரோதமாக திட்டியதால் உங்கள் மீது புகார் கொடுத்து உங்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியதால் போலிசார் அந்த புகாரை எடுத்துக்கொள்ளாமல் பின்னிட்டு நீங்கள் கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரை உரிமையியல் சம்மந்தமான வழக்கு என்பதால் காவல் துறையினர் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அதேப்போல வேறஒரு சம்பவத்தில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எந்த காலக்கட்டத்திலும் எதிரயால் அ.சா.1 க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை உங்கள அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகள் எந்த காலக்கட்டத்திலும் திட்டவில்லை திட்டியிருந்தால் நீங்களே புகார் கொடுத்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. தியானேஸ்வரன், ராஜ்குமார் உங்கள உறவினர் என்றால் சரிதான். உங்கள் தெருவில் அதிக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவில் தியானேஸ்வரன், ராஜ்குமார் உங்கள உறவினர் அல்லாமல் மற்றவர்களும் வசித்து வருகிறார்கள் என்றால் எங்கள் ஊரில் மொத்தம் 60 வீடுகள் உள்ளது, நாங்கள் வசிக்கும் வடக்குத் தெருவில் 21 வீடுகள் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் தியானேஸ்வரன், ராஜ்குமார் சம்பவ இடத்தில் இல்லை உறவினர் என்பதால் அவர்களை இவ்வழக்கில் சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 உங்கள் உறவினர் என்பதால் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நீங்கள் இல்லை என்றால் சரியல்ல.